4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 242/2019 நாள்: 01.12.2025 வா.சா.1 – விக்னேஷ்குமார்**

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 5 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை -**

நான் 2015 ம் ஆண்டு முதல் உடுமலைபேட்டையில் வழக்கறிஞராக பணிபுரிகிறேன். வா.சா.ஆ.4 ஆன பாகவிடுதலை பத்திரத்தில் உள்ள வாசகங்களின் உள்ளடக்கங்களை தெரிந்து தான் நான் எழுதி வைத்தேன் என்றால் சரியல்ல. நான் எனது தாயார் அழைத்ததன் பேரில் மேற்படி ஆவணத்தில் கைபொய்யப்பம் போட்டேன், அதன் உள்ளடக்கங்களை நான் படித்து பார்க்கவில்லை. மேற்படி ஆவணத்தின் உள்ளடக்கங்களை படித்து பார்க்கவில்லை என்ற விவரத்தை வழக்குரையில் சொல்லவில்லை, தற்போது தான் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னை கட்டாயப்படுத்தி, வற்புறுத்தி மேற்படி ஆவணத்தை ஏற்படுத்தினார்கள் என்ற சங்கதியை நான் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை நானும், எனது சகோதரிகளும் எழுதி கொடுக்க தகுதியுள்ள நபர்கள் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் உள்ள உள்ளடக்கங்களை படிக்கவில்லை என்று ஆவணம் ஏற்படுத்தப்பட்ட தேதியிலிருந்து 3 ஆண்டுகளுக்குள் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எழுதிக்கொடுத்த விடுதலை பத்திரம் செல்லாது என்று அறிவிக்க வேண்டும் என்று வழக்குரையில் கோரியுள்ளதால்

தமிழ்நாடு நீதிமன்ற கட்டண சட்டம் 25(d) ன் கீழ் கட்டணம் செலுத்தியது தவறு பிரிவு 40 ன் கீழ் தான் கட்டணம் செலுத்த வேண்டும் என்றும், அதனால் நான் கட்டியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறு என்றால் சாட்சி அது பற்றி தெரியவில்லை என்று கூறுகிறார். மேற்படி ஆவணம் செல்லத்தகாது என்று விளம்புகை கோர முடியாது, அதை ரத்து செய்யதான் நான் பரிகாரம் கோர முடியும் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்திற்கு எனது பங்கிற்கான நீதிமன்ற கட்டணத்தை மதிப்பிடாமல், ரூ.5000 மட்டும் நீதிமன்ற கட்டணம் கட்டியுள்ளது தவறு என்றால் சரியல்ல. என்னுடைய வழக்குரையில் 10வது பத்தியில் தற்போது தான் வா.சா.ஆ.5 கிரைய பத்திரம் தெரியவந்தது என்று குறிப்பிட்டுள்ளேன், எந்த தேதியில் எனக்கு தெரியவந்தது என்று சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் நகலை எப்போது பார்த்தேன் என்ற விவரமும் இல்லை என்றால் சரிதான். மேலும் வழக்குரையில் மேற்படி கிரையம் பற்றி தெரிந்து கொள்வதற்கு நான் வில்லங்க சான்றிதழ் பெற்று பார்த்ததாக நான் சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் உள்ள பாகபிரிவினை பத்திரத்தில் எனக்கு தந்தைக்கு தாவா சொத்தை தவிர கணக்கம்பாளையத்தில் உள்ள வீட்டு மனையிடங்கள் மேற்படி ஆவணத்தில் டி பட்டிகை சொத்தில் ஒதுக்கப்பட்டுள்ளன என்றால் சரிதான். தாவா சொத்தோடு சேர்ந்து எனது தந்தையாருக்கு மேற்படி பாகபிரிவினையில் 7.23 ஏக்கர் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தந்தைக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் 3.28 ஏக்கர் ஏற்கனவே எனது குடும்பத்தார் விற்பனை செய்துள்ளார்கள் என்றால் சரிதான்,

ஆனால் வழக்கு தாக்கல் செய்யும் போது தான் தெரியவந்தததாக சாட்சி கூறுகிறார். மேற்படி 3.28 ஏக்கர் விற்பனை செய்யும் போது நானும் தரப்பினராக இருந்து கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆன கிரைய ஆவணத்தில் நான் கையொப்பம் போட்டுள்ளேன் என்றால் சரிதான். S.C.ராமலிங்கம் என்பவர் வா.சா.ஆ.1 ஆவணத்தில் ஒரு பாகஸ்தர் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் S.C.ராமலிங்கத்தின் மகன் ஷ்யாம் என்பவர் அதில் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் வா.சா.ஆ.5 ஆவணத்தில் சாட்சி கையொப்பம் போட்டதை நீதிமன்றத்தில் மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மேலும் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2025.12.01 17:17:45 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.